1993 பிப்ரவரி 12]

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 77, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண் 78, திரு. கே. செல்வராஜ், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. சிங்கை கோவிந்தராசு. மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

78—

பச்சிளங் கைக்குழந்தைகளுக்கு ராகி மாவு, பால் பவுடர் ஆகியவைகள் இலவசமாக வழங்கும் திட்டம்.

*11818—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பச்சிளங் கைக்குழந்தைகளுக்கு ராகி மாவு, பால் பவுடர் இலவசமாகக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ராகி மாவு கொடுக்கப்படுகிறது. பால் பவுடர் இலவசமாகக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்ற சொல்லுக்கே இடமில்லாத நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் ஏழையெளியவர்களுக்காக சத்துணவுத் திட்டம் மூலம் பல்வேறு நலத் திட்டங்களைக் கொடுத்திருந்த போதிலும், கடந்தகாலத்தில் ஏழையெளிய குழந்தைகளுக்கு, பள்ளிகளிலே பயிலுகின்ற குழந்தைகள்வரை பால் பவுடர் திட்டம் வழங்கப்பட்டு வந்தது. அந்தத் திட்டத்தின் வாயிலாக தமிழகத்திலே இருக்கக்கூடிய நலிவுற்ற குழந்தைகளின் உடல், வளம் பெறுகின்ற வகையிலே அமைந்திருந்தது. அந்தத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டத்தின்கீழ் 6 மாதம் முதல் 3 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு கோதுமை, ராகி, சோயா மாவு, வெல்லம், வைட்டமின் கலவை, தாது உப்பு ஆகியவை அடங்கிய சத்து உருண்டை தினமும் வழங்கப்படுகிறது. இந்த சத்து உருண்டையில் 100 கிராம் அளவிற்கு 380 கலோரி சத்து உள்ளது. இது தவிர, பரிசோதனை அடிப்படையில் மதுரை, பெரியகுளம் பகுதியில் காலை வேளையில் பாசிப் பயிறு வேக வைத்து குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டால் உலக வங்கியின் உதவியுடன் பிற பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்படும். ஆகவே, எல்லா வைட்டமின் சத்துக்களும் நிறைந்து இருக்கிற ராகி மாவும், சோயா மாவும், கோதுமையும் தரப்படுகின்ற காரணத்தினால், பால் பவுடர் தருகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 79, திரு. ஆர். பி. பரமசிவம். மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

79—

தமிழ்நாட்டிலுள்ள இறால் பண்ணைகள் மூலம் கிடைக்கும் வருமானம்

*9688—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இறால் பண்ணைகள் எத்தனை உள்ளன ?

(ஆ) அவற்றின் மூலம் அரசிற்கு கிடைக்கும் வருமானம எவ்வளவு?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.